# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 71 — 1973 අගෝස්තු 03 වැනි සිකුරාදා — 1973.08.03

71 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்கேற்றவாறு தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... | 759 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 771 |


*கவனிக்க.—மக்கோனைப் பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், இலங்கைக் குட்டநோய்த் தடுப்புச் சங்கம் சட்டமூலமும், இலங்கைப் பொது வைத்தியர்கள் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

**1 : 1** விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**1 : 2** ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்கு மிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

**1 : 3** விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

**2 : 1** அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

**2 : 2** மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராயின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சகத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

**3 : 1** நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக் களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

**3 : 2** அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தி யோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

**3 : 3** அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர் களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

**4 : 1** நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோ கத்தர்கள் மேலே **3** ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந் தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின் வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண் டும் :—

**4 : 1 : 1** சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக் குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத் தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

**4 : 1 : 2** அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங் கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக **1956** ஆம் ஆண்டின் **33** ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள் கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதி களுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

**4 : 1 : 3** சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற் றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**4 : 1 : 4** தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முத லாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங் கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்து வதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வரு டத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத் திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கி யுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப் படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது **4 : 1 : 5** ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத் தாகும் அத்தகைய காலம் வரையில் செய லில் இருக்கும்.

**4 : 1 : 5** தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங் கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத் திறனை அடையாவிட்டால் தாபனக் கோவை யின் **II** ஆம் அத்தியாயத்தின் **12 : 13** ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

**4 : 1 : 6** சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் மீது **4 : 1 : 3** ஆம் **4 : 1 : 4** ஆம் **4 : 1 : 5** ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப் படமாட்டா.

**4 : 1 : 7** அரச சேவையின், நிரந்தரமான பதவி யொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய் யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவி யொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல் பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண் டியதில்லை.

**4 : 1 : 8** தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத் திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய் வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்ப தனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர் கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட் படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

**5 : 1** அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலா யினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலா யினும் **1.1.72** க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் **6** சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறு தியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் **9** சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப் பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத் திலிருந்து **6** சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

**5 : 2** **1971.12.31** க்கு முன்பு அரச சேவையில் ஓய் வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் **1972.1.1** க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர் கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்ப தற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தி யோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

**6 : 1** ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண் டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

**விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.**

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

**7 : 1** எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

**7 : 2** வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

**7 : 3** ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

**7 : 4** விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

**7 : 5** விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

**8 : 1** தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

### கமத்தொழிற்றிணைக்களம்

*கமத்தொழில் பரிசோதனை உத்தியோகத்தர் பதவிகள்*

*கமத்தொழில் பரிசோதனை உத்தியோகத்தர் வகுப்பு II பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப் பதவிகள் நிரந்தரமானவை. அரசாங்க சேவைச் சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்தப்படவேண்டும். நியமனம் முதற்கண் 3 ஆண்டுகளுக்கு பரீட்சார்த்த நிலையில் அமையும் ;*

*(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத் தீவின் எப்பகுதியிலும் கடமையாற்றச் சித்தமுடையவராய் இருத்தல் வேண்டும்.*

*3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு.—*

*ஆண்டொன்றுக்கு ரூபா 5,304—9×144 ம், 4×180—ரூபா 7,320 (ரூபா 6,024 க்கு முன் வி. த.)*

*4. **தேவையான தகைமைகள்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றிற்குத் திருத்திகரமான சான்றுகள் தரவேண்டும் :—*

*(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும்.*

*(ஆ) (i) விவசாயப் பட்டதாரி, அல்லது*

*(ii) தாவரவியல், விலங்கியல் அல்லது இரசாயனச் சிறப்புப் பட்டமுடைமை, அல்லது*

*(iii) தாவரவியல் விலங்கியல், இரசாயனவியல் சாதாரண பட்டமுடைமை.*

*(இ) 1973 ஆகஸ்ட் 31 ம் திகதி 22 வயதிற்குக் குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ் வயதெல்லை அமையாது).*

*5. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டிய பிரதிகள் :*

*(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு.கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்திற்கெனக் கொடுக்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).*

*(ஆ) மிக உயர் கல்வித் தராதரப் பத்திரம்.*

*(இ) அண்மையில் பெற்ற நற்சான்றுப் பத்திரங்கள் மூன்று.*

*மு.கு.—மேற்படி சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் அனுப்பப்படலாகாது.*

*6. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள படிவ அமைப்பில் தயாரிக்கப்பட்டு பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை, அவர்களுக்கு 1973 ஆகஸ்ட் 31 ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.*

*7. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான வேறு ஏதேனும் கடிதத் தொடர்புகள் பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டுமேயன்றி இத்திணைக்களத்தைச் சார்ந்த வேறு உத்தியோகத்தர் எவருக்கோ அல்லது எனக்கோ அனுப்பப்படுதலாகாது.*

*8. விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படும். இந்த வர்த்தமானியின் I பாகம் (IIஅ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகட்கு தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.*

*பி. ரி. ஜினேந்திரதாச,*
*கமத்தொழிற் பணிப்பாளர்.*

*கமத்தொழிற்றிணைக்களம்,*
*பேராதனை,*
*1973 ஜூலை 10.*

### மாதிரி விண்ணப்பப்படிவம்

*கமத்தொழிற்றிணைக்கள கமத்தொழில் பரிசோதனை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்*

*(மு.கு.—விண்ணப்பத்தினைக்கொண்ட தபாலுறைகள் அவற்றின் இடதுபக்க மேல் மூலையில் 'கமத்தொழில் பரிசோதனை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்' என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்)*

*1. முழுப் பெயர் :————.*

*2. முகவரி :————.*

*3. பிறந்த திகதியும் இடமும் :————.*
*(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படவேண்டும்)*

*4. நாட்டினம் :————.*

*5. விவாகமானவரா அல்லாதவரா :————.*

*6. கல்வியும்/அல்லது தொழினுட்ப தகைமைகளும் :————.*
*(சான்றுப் பத்திரங்களில் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)*

*7. தொழில் சம்பந்தமான விபரங்களும்/அல்லது பயிற்சிகளும் :————.*

*(பாடசாலையிலிருந்து விலகியதிலிருந்து)*

8. ஏற்கெனவே அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பொது யாக்கத்தில் கடமையாற்றியிருப்பின் அதனின்றும் விலகியதற்கான காரணங்களைத் தருக :————.

9. குற்றவியல் சம்பந்தமான குற்றத்திற்காக எப்போதாவது நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டிருப்பின் அக் குற்றங்களினதும், தண்டனைகளினதும் விபரங்களைத் தருக :————.

10. இணைக்கப்பட்டுள்ள சான்றுப்பத்திரங்கள் கொடுத்த மூவரினதும் பெயர்களையும் பதவிகளையும் தருக :————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்ட விபரங்களில் எவையேனும் உண்மையற்றவை அல்லது, பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நியமனத்தின் பின் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் பாத்திரராவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

8-3—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

## குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம்

### தற்காலிக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவி

குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தில் தற்காலிக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு அரச ஊழியர்களிடமிருந்து (ஆண்கள் மாத்திரம்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க் காணப்படும் படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973.08.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாகத் திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

இப்பதவிக்கு விண்ணப்பகாரர் ஒருவர் தெரிவு செய்யப்படின், தற்போதைய பதவிக்குத் திரும்ப மாற்றும் உரிமையுடன் தற்காலிக கடமைப்படையில் அவரை விடுவிக்க முடியுமா என்பதைத் திணைக்களத் தலைவர் குறிப்பிடல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,296—16 × 144 ம், 8×180—ரூபா 8,040 மாகும். ரூபா 4,728 ம், 6,600 ம் 7,500 ம் முன்னர் வினைத்திறன்காண் தடை உண்டு.

3. **நியமன நியதிகள்.**—இப் பதவி தற்காலிகமானது. தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் பதிற் கடமையடிப்படையில் நியமிக்கப்படுவார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வருவனவற்றை ஆதாரங்களுடன் காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973.08.30 ஆம் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) 1973.08.30 ஆம் திகதியளவில் அரசாங்க சேவையில் 5 வருடங்கள் பூர்த்தி செய்த அரச ஊழியராயிருத்தல் வேண்டும்.

(ஈ) (1) சிரேட்ட தராதரப் பத்திரம் இருத்தல் வேண்டும்.

அல்லது

(2) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) இரு தடவைகளுக்கு மேற்படாமல் தோன்றி இவற்றில் ஒரு தடவையில் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். எண் கணிதம் அல்லது கணிதம், சிங்களம் அல்லது தமிழ் ஆகியவையுட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

(3) அதற்குச் சமமான அல்லது அதிலுயர்ந்த பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வரும் பிரதிகளை விண்ணப்பங்களுடன் அனுப்புதல் வேண்டும் :—

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(2) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

6. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் 1 ஆம் பாகம் (2 அ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

டி. எம். பீ. பி. தசநாயக்க,
குடிவரவு-குடியகல்வுக் கட்டுப்பாட்டதிகாரி.

குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம்,
த. பெ. எண். 586,
கொழும்பு-1.

### தற்காலிக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

(கவனிக்க வேண்டியது.—விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " தற்காலிக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் " எனக் குறிப்பிடுதல் வேண்டும்)

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

4. நாட்டினம் :————.

5. மணமானவரா அல்லது தனியாளா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. பாடசாலையிலிருந்து விலகியது தொடக்கமுள்ள தொழிலின் விபரங்கள் :————.

8. தற்போதைய பதவி :————.

9. விண்ணப்பகாரர் பேச, வாசிக்க, எழுதக்கூடிய மொழிகள் : ————.
(ஒவ்வொரு மொழியிலும் சித்தியடைந்த மிகவுயர்ந்த தரத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்)

10. விண்ணப்பத்தை ஆதரிக்கக் கூடிய விசேட உரிமைகள் : ————.
(உயர்தொழிற் தகைமைகள் முதலியன)

11. விண்ணப்பகாரரின் ஆற்றலையும், குணத்தையும் பற்றிச் சிபாரிசு செய்யக் கூடிய இருவரின் பெயர்களும் முகவரிகளும்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

7-46—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

என். எஸ். 2/59/27

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### துறைமுகச் சிறுகல உதவிக் கண்காணிப்பாளர் பதவி

துறைமுகச் சிறுகல உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க் காணப்படும் மாதிரிப் படிவத்தில் உள்ளபடி தயாரிக்கப்பட்டு, கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கப்பற்றுறை ஆணையாளருக்கு 1973 ஓகத்து 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்கான திரட்டுச் சம்பள அளவுத்திட்டம் வருடமொன்றுக்கு ரூபா 6,780—7×180—8,040 ஆகும்.

3. **நியமன விதிகள்.**—இப்பதவி நிரந்தரமானது ; நியமனம் முதலில் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் அல்லது பதில் நியமன அடிப்படையில் அமையும்.

4. **தேவையான தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும்.—

(அ) கடலோரத் தொழிற் தலைவனுக்கான தகைமைச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சி. பா. த. பத்திரம் அல்லது அதற்குச் சமமான பத்திரம் பெற்றிருப்பின் விரும்பத்தக்கது.

(ஆ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(இ) சிங்களமும், தமிழும் பேசக்கூடியவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) 1973 ஓகத்து 24 ஆம் திகதி 28 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(உ) லோஞ்சிகள், படகுகளின் தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யக் கூடியவராயும், கப்பலோட்டிகளின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவும் இருத்தல் வேண்டும்.

(ஊ) முன்னைநாள் இலங்கை வேத்தியில் கடற்படைத் தொண்டர்படையின் ஒதுக்கசேவை அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. **விண்ணப்பகாரர் விண்ணப்பங்களுடன்** பின்வருவனவற்றின் படிகளை (மூலங்களையல்ல) அணைத்தல் வேண்டும்.—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு :** சமயதிட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

(ஆ) பெற்ற மிக உயர்ந்த கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.

(இ) கடலோரத் தொழிற் தலைவனுக்கான தகைமைச் சான்றிதழ்.

(ஈ) விண்ணப்பகாரரின் தகைமைகள், பண்பு, பதவிக்கு ஏற்புடைமைபற்றிச் சமீபத்தில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—இச்சான்றிதழ்களின் படிகள் விண்ணப்பகாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டா.

பின்வரும் தகவல்களும் அளிக்கப்படல் வேண்டும்.—

பிறந்த இடம்.——

(அ) விண்ணப்பகாரர்.

(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை.

(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன்.

(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன்.

6. விண்ணப்பங்கள் கப்பற்றுறை ஆணையாளர் (கடற்செலவுக் கிளை) கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு என்று முகவரியிடப்படவேண்டுமேயொழிய இத்திணைக்களத்தைச் சேர்ந்த எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்டமுறையில் அனுப்பப்படல் ஆகாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இக்கசெற்றின் I ஆம் பகுதி II ஆம் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ள. அவற்றைத் தயவு செய்து பார்வையிடுக.

ஜீ. பீ. பி. த. சில்வா,
பதில் கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு-1,
1973 ஜூன் 20 ஆம் திகதி.

## மாதிரிப் படிவம்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### துறைமுக சிறுகல உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. நிரந்தர முகவரி :————.

3. வயதும் பிறந்த திகதியும் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்)

4. தேசிய இனம் :————.

5. பிறந்த இடம்.—

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.

(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப்பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப்பூட்டன் :————.
(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் (ஆ) வோ அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்திராவிடின் (அ) வுடன் (ஆ), (இ) ஆகிய இரண்டுமோ, அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படல் வேண்டும்.)

6. விண்ணப்பகாரர் திருமணம் செய்தவரா ? செய்யாதவரா ? : ————.

7. விளம்பரத்தில் வேண்டப்பட்ட கல்வித் தகைமைகள் :————
(விளம்பரத்தில் வேண்டப்பட்ட வண்ணம் சான்றிதழ்களின் பிரதிகள் அணைக்கப்படுதல் வேண்டும்.)

8. கல்வி பயின்ற பாடசாலைகளும், பாடசாலை விடுகைத் திகதியும் :————.

9. பாடசாலையை விட்டு விலகிய பின் ஈடுபட்டிருந்த தொழில்களின் அட்டவணை சேவை விபரங்களுடன் :————

10. மாட்சிமை தங்கிய மகாராணியின் படைகளில் சேவை செய்திருப்பின் அச்சேவை பற்றிய விபரங்களைத் தருக :————.

11. தற்போதைய தொழிலும், சம்பளமும் :————.

12. கடலோரத் தொழிற் தலைவருக்கான தகைமைபெற்ற சான்றிதழின் இலகமும், திகதியும் :————.

13. துறைமுகக் கலங்களின் பேணலிலுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள் :————.

14. தொழிலாளரை வழிநடத்துவதில் அனுபவம் பற்றிய விபரங்கள் :————.

15. சிங்களம், தமிழ் பேசமுடியுமா ? :————.

16. வேறேதும் விசேட உரிமைக் கோரிக்கைபற்றிய விபரங்கள் : ————.

17. பண்புச் சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்களும் பதவிப் பெயரும் :————.
(அச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்).

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களையாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவ்விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது தவறானவையென்று காணப்படுமிடத்து அப்பிழையானது, நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் அப்பிழை கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவிநீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

8-6—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

## தேசிய சேமிப்பு வங்கி

### வெற்றிடங்கள்

கீழே குறிக்கப்பட்டுள்ள, தேசிய சேமிப்பு வங்கிப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வங்கிச் சேவையின் I ஆம் தரத்திலுள்ள பதவி**

**வேண்டப்படும் தகைமைகள்.**—பட்டயம் பெற்ற கணக்காளர் அல்லது ஆகுசெலவு, முகாமைக் கணக்காளர், அத்துடன் ஓர் அரசாங்கத் திணைக்களத்தில், நியதிச்சட்டச் சபை அல்லது கூட்டுத்தாபனத்தில், பெரிய வர்த்தக நிறுவனத்தில் அல்லது வங்கியில் ஆகக் குறைந்தது 7 (ஏழு) ஆண்டு நிறைவேற்றுத்துறை அனுபவமும் இருத்தல் வேண்டும். மேற்காணும் தகைமைகளோடு, வங்கியாளர் நிறுவகத் துணை உறுப்பாண்மை (ஏ.ஐ.பி. லண்டன்) வங்கியாளர் பயிற்சி நிறுவக இறுதித் தேர்வு அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது ஒத்த தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரர் மற்றையோரை விட விரும்பப் படுவர்.

**வயது.**—விண்ணப்பத் தேதி முடிவடையும் நாளன்று 30 ஆண்டுக்கும் 45 ஆண்டுக்கும் இடைப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**சம்பள வீதம்.**—மாதமொன்றுக்கு ரூபா 1,250—15×50—2,000 அடிப்படைச் சம்பளமும் வங்கி வீதங்களில் படிகளும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், அவரின் தகைமைகள், அனுபவம் என்பவற்றிற்கிணங்கச் சம்பள வீதத்தில் பொருத்தமான உயர்படி ஒன்றில், பணிப்பாளர் சபையின் தற்றுணிபில், நியமிக்கப்படலாம்.

**பிரதான ஏம உத்தியோகத்தர் (தரம் III)**

**வேண்டப்படும் தகைமைகள்.**—அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது அதற்குச் சமமானதொன்று இருத்தல் வேண்டும். இத்துடன் பொலிசு அல்லது படைதாங்கு சேவைகளில் ஆகக்குறைந்தது 3 ஆண்டு அனுபவமும் இருத்தல் வேண்டும்.

அல்லது

பொலிசு அல்லது படைதாங்கு சேவைகளில், கசெற்படுத்திய/ஆணைபெற்ற உத்தியோகத்தர் பதவிவரிசையில் ஆகக்குறைந்தது 5 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

பொலிசு அல்லது படைதாங்கு சேவைகளில் ஆகக்குறைந்தது 10 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும். இதில், ஆகக் குறைந்தது 3 ஆண்டு அனுபவம், கசெற்படுத்திய/ஆணைபெற்ற உத்தியோகத்தர் பதவிவரிசையில் பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

**வயது.**—விண்ணப்பத் தேதி முடிவடையும் நாளன்று 35 ஆண்டுக்கும் 50 ஆண்டுக்கும் இடைப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**சம்பள வீதம்.**—மாதமொன்றுக்கு ரூபா 485—8×30, 6×40—965 சம்பளமும் வங்கி வீதங்களில் படிகளும். 805 ரூபாவுக்கு மேல் போதற்கு திறமைகாண் தடையொன்று செயற்படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், அவரின் தகைமைகள், அனுபவம் என்பவற்றிற்கிணங்கச் சம்பள வீதத்தில் பொருத்தமான உயர்படி ஒன்றில், பணிப்பாளர் சபையின் தற்றுணிபில், நியமிக்கப்படலாம்.

**பிரதிப் பிரதான ஏம உத்தியோகத்தர்—(தரம் IV)**

**வேண்டப்படும் தகைமைகள்.**—பொலிசு அல்லது படைதாங்கு சேவைகளில், கசெற்படுத்திய/ஆணைபெற்ற உத்தியோகத்தர் பதவிவரிசையில் ஆகக்குறைந்தது 3 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

ஜி.ஏ.கியு/ஜி.சி.ஈ. உயர்தரம்/எச்.எஸ்.சி இருத்தல் வேண்டும். இத்துடன் பொலிசு அல்லது படைதாங்கு சேவைகளில், பொலிசு உப சோதனைகாரர், அல்லது படைதாங்கு சேவைகளில் சிரேட்ட, ஆணைபெறாத உத்தியோகத்தர், பதவிவரிசையில் ஆகக் குறைந்தது 3 ஆண்டு அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**வயது.**—விண்ணப்பத் தேதி முடிவடையும் நாளன்று 30 ஆண்டுக்கும் 40 ஆண்டுக்கும் இடைப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**சம்பள வீதம்.**—மாதமொன்றுக்கு ரூபா 305—8×15, 10×25—675 சம்பளமும் வங்கி வீதங்களில் படிகளும். 575 ரூபாவுக்கு மேல் போதற்கு திறமைகாண் தடையொன்று செயற்படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர், அவரின் தகைமைகள் அனுபவம் என்பவற்றிற் கிணங்கச் சம்பள வீதத்தில் பொருத்தமான உயர்படி ஒன்றில், பணிப்பாளர் சபையின் தற்றுணிபில், நியமிக்கப்படலாம்.

**உபசாரகர் (தரம் VI)**

**வேண்டப்படும் தகைமைகள்.**—க.பொ.த.ப. (சாதாரணம்), சிங்களம்/தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களோடு இருத்தல் வேண்டும். அத்துடன், சிரேட்ட நிறைவேற்றுநர் ஒருவருக்கான அந்தரங்க சுருக்கெழுத்தாளராக, அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தில், நியதிச்சட்ட சபை அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பெரிய வர்த்தக நிறுவனத்தில் உபசாரகராக, ஆகக் குறைந்தது 2 ஆண்டு செயலாளர் பணி அனுபவமும் இருத்தல் வேண்டும்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் தெரிந்த விண்ணப்பதாரர்கள் மற்றையோரை விட விரும்பப்படுவர்.

**வயது.**—விண்ணப்பத் தேதி முடிவடையும் நாளன்று 35 வயதுக்குக் கீழ்ப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**சம்பள வீதம்.**—மாதமொன்றுக்கு ரூபா 118—16×6, 4×7, 1×8, 6×10—310 சம்பளமும் வங்கி வீதங்களில் படிகளும்.

**எல்லாப் பதவிகளுக்கும் ஏற்புடையதான பொது நிபந்தனைகள்**

(i) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியம் அற்றவையுமாகும் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர், அவரது மொத்தச் சம்பளத்தின் 6 சதவீதத்தை வங்கிச் சகாய நிதியத்திற்குச் செலுத்தும்படி தேவைப்படுத்தப்படுவார். வங்கி செலுத்தும் தொகை 9 சதவீதமாகும்.

(ii) நியமனங்களானவை, மூன்றுண்டுத் தகுதிகாண் காலத்திற்கு அமைந்தனவாக இருக்கும். அரச அல்லது கூட்டுத்தாபனப் பகுதிகளில் கணிசமான அளவுக் காலச் சேவையையுடைய எவரேனும் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால், அத்தகைய விண்ணப்பதாரரின் நியமனமானது வங்கிப் பணிப்பாளர் சபையினல் தீர்மானிக்கப்படக் கூடியவாருன குறைந்த ஒரு சோதனைக் காலத்தின் மீது செய்யப்படலாம்.

(iii) விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தாம்—

(அ) நல்லொழுக்கமானவரெனவும் உடல் தகுதியுடையவரெனவும்,

(ஆ) வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் அனுபவமும் உடையவரெனவும்,

திருத்திகரமான சான்று தருதல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்களானவை, விதிக்கப்பட்டுள்ளதான அச்சிட்ட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். இப்படிவங்கள், சொந்த முகவரியிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 8"×4" க்குக் குறையாத கடித உறையை அனுப்பி வங்கியின் ஆளணி உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட வேண்டும்.

(v) ஒரு விண்ணப்பப் படிவம் அல்லது அதையொட்டிய ஒரு கடிதம் தபாற் சேவையில் இழக்கப்பட்டுவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(vi) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள்—

(அ) இலங்கையின் பகுதி எதிலும் சேவை புரிதற்கு அவர்களது உடலின் தகுதியொட்டி வைத்தியப் பரிசோதனை ஒன்றைச் செய்விக்குமாறும்;

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தினதும், அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்குத் தற்போதுள்ள அல்லது எதிர்காலத்தில் புகுத்தக்கூடிய எவையேனும் சட்டங்களினதும் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறும்;

(இ) வங்கியினல் தீர்மானிக்கப்படக் கூடியவாருன அத்தகைய தொகையிலும் முறையிலும் பிணைப்பணம் தருமாறும்;

(ஈ) இலங்கைக் குடியரசிற்கு விசுவாசமாக இருப்பர் என்ற சத்தியம் ஒன்றையும், இரகசியச் சத்தியம் ஒன்றையும் செய்யுமாறும்.

தேவைப்படுத்தப்படுவார்கள்.

(vii) உரிய முறையில் நிறைவுபடுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களானவை, ஆளணி உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி, "சேமிப்பு மன்றம்". கொழும்பு 3 என்ற முகவரிக்கு, 1973 ஓகத்து 24 ஆம் தேதிக்குப் பிந்தாமல் ஆளணி உத்தியோகத்தருக்குக் கிடைக்கத்தக்கதாகப் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

முகாமை இயக்குநர்,
தேசிய சேமிப்பு வங்கி.

கொழும்பு 3,
1973.07.20.

8-247—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

**கல்வி அமைச்சு**

*அரசினர் முஸ்லிம் ஆசிரியர் கலாசாலைகளில் (தமிழ் மொழிமூல) சங்கீத/நடன போதனாசிரியர்/போதனாசிரியை பதவிகள்*

கல்வி அமைச்சின் கீழுள்ள அரசினர் முஸ்லிம் ஆசிரியர் கலாசாலைகளில் சங்கீத/நடன போதனாசிரியர்/போதனாசிரியை பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவமுறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியனவாக எனக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டங்கள்.**—இப்பதவிகளுக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டங்கள் பின்வருமாறுரும் :—

(அ) இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் அல்லது ஒரு நிலையத்தால் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கும் இலங்கைச் சங்கீத/நடனக் கல்லூரியில் சங்கீதத்தில்/நடனத்தில் நடைபெறும் ஆறு வருடப் பொதுப்பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கும் —

ரூ. 4, 170—11/90—5/144—ரூ. 5,880.

(ஆ) சங்கீதத்தில்/நடனத்தில் காந்தர்வ சபையால் வழங்கப்படும் இறுதித்தராதரப் பத்திரம் அல்லது இலங்கைச் சங்கீத/நடனக் கல்லூரியால் (4 வருட பயிற்சி நெறியின் பின்) வழங்கப்படும் சங்கீத/நடன இடைமானித்தராதரப் பத்திரம் அல்லது சங்கீத/நடன தகுதித் தேர்வுப் பத்திரத்துக்கு வழிவகுக்கும் இடைமானித் தரத்தைய தராதரப் பத்திரம் பெற்றுள்ளவர்களுக்கு—

ரூ. 3,450—17/90—ரூ. 4,980.

3. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்பவராக நிரூபிக்க வேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 24.8.1973 அன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அரசாங்க சேவையில் ஏலவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது).

(இ) அபேட்சகர்கள் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு சி. பா. த. பத்திர அல்லது சமனான பரீட்சை ஒன்றில் அல்லது க. பொ. த. (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் குறைந்தபட்சம் தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைந்திருப்பதுடன் மேலுள்ள 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) மேலுள்ள 2 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள வேண்டிய உயர்தொழில் தகைமைகளைப் பெற்று ஆனால் 3 (இ) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள கல்வித்தகைமைகளைப் பெறாதவர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் அத்தகைய அபேட்சகர்கள் நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டின் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் க. பொ. த . (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைய வேண்டும்.

(உ) முஸ்லிம் ஆசிரியர் கலாசாலைகளில் இஸ்லாம்/முஸ்லிம் முறையான சங்கீதத்தை/நடனத்தை கற்பிக்கக்கூடியவராக அபேட்சகர்கள் இருத்தல் வேண்டும்.

(ஊ) அபேட்சகர்கள் தமிழில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

4. **நியமன நியதிகள்**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவையெனினும் உபகாரச் சம்பள உரித்தற்றவையாகும். நியமனங்கள் சேம இலாப நிதி அடிப்படையில் அமையும். எனினும், உபகாரச் சம்பளத் திட்டத்தின் கீழ் நியமனங்கள் பெற்று 31.12.71 வரை அரசாங்கத்தின் கீழ் நிரந்தர பதவிகளைவகித்தவர்களும் ஏலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுமான உத்தியோகத்தர் அவ்வுரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் துவீபத்திலுள்ள முஸ்லிம் ஆசிரியர்கலாசாலைகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

5. விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைத்தனுப்ப வேண்டும் :

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ii) அதியுயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(iii) சமீப காலத்தைய மூன்று குணச் சான்றிதழ்கள் (இப்பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா, அரசாங்க சேவையில் ஏலவே உள்ளவர்களுக்கு இந்நிபந்தனை அமையாது).

6. இவ்வர்த்தமானியில் I ஆம் பகுதி (II அ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகிறது.

பி. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளர்.

ஆசிரியர் கல்விக் கிளை,
கல்வி அமைச்சு,
கொழும்பு 2,
1973 ம் ஆு யூலை மாதம் 24 ஆந் திகதி.

**மாதிரிப் படிவம்**

*அரசினர் முஸ்லிம் ஆசிரியர் கலாசாலைகளில் சங்கீத/நடன போதனாசிரியர்/போதனாசிரியை பதவிக்கான விண்ணப்பம்*

(மு. கு : விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடது பக்க மேல்லையில் "சங்கீத/நடன போதனாசிரியர்/போதனாசிரியை பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக அடையாளமிடப்பட்டு கல்வி அமைச்சின செயலாளர் ஆசிரியர்கலாசாலைக் கிளை), மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பப்பட வேண்டும்)

1. (i) முழுப்பெயர் :————.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :————.

2. முகவரி (i) சொந்த :————.
   (ii) உத்தியோக :————.

3. (i) பிறந்த திகதியும் இடமும் :————.
   (ii) 24.8.1973 அன்றுள்ளபடி சரியான வயது (பிறப்புப் பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டும் :
   ..................வரு. ............................மா. ................நாள்.

4. நாட்டினமும் அது பெற்றுக் கொள்ளப்பட்ட முறையும் :———.

5. தனியாளா, விவாகம் செய்தவரா ?

6. கல்வி தகைமைகளும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளும் :————.
(சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).

7. உயர்தொழில் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் ) :————.

8. பாடசாலையிலிருந்து விலகிய பின் வகித்த உத்தியோகம்/பெற்ற பயிற்சி அல்லது இவ்விரண்டும் பற்றிய விபரங்கள் (பின்வரும் முறையில் கொடுக்கவும்) :—.

| நிலையத்தின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | வகித்த பதவி | சேவைக்காலம் | விலகிதாற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

9. குற்றவியல் குற்றத்தின் பெயரில் யாதேனும் சட்டமுறைக் கோட்டில் எத்தருணமேனும் குற்றம் சாட்டப்பட்டிருப்பின் குற்றம், தண்டனை ஆகியவை பற்றிய விபரங்களைக் கொடுக்கவும் :————.

10. தமிழில் பெற்றுள்ள தகைமைகள் :————.

11. குணச் சான்றிதழ்கள் கொடுத்துள்ள மூவரின் (உறவினர்களாக இருக்கலாகாது) பெயர்களும் பதவிப் பெயர்களும். சமீப காலத்தைய மூன்று குணச்சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் படிகளல்ல) இணைக்கப்பட வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இவைகளை அனுப்ப வேண்டியதில்லை) :————.

12. வேறு யாதேனும் தகைமைகள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுபட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யயானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவனுக் கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

அதிபரின் சிபார்சு :

7–83—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 7!

---

**கல்வி அமைச்சு**

*அரசினர் ஆசிரியர் கலாசாலைகளிலான ஆய்கூட உதவியாளர் III ஆந் தர பதவிகள்*

கல்வி அமைச்சின் கீழுள்ள அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் ஆய்கூட உதவியாளர் III ஆந் தர பதவிகளுக்கு, கல்வி அமைச்சின் கீழுள்ள ஆய்கூட II ஆம் வகுப்பு பரிசாரர்களுள் (முன்னர் ஆய்கூட I ஆந் தர பரிசரென்ற பதவிப் பெயர் வழங்கப்பட்டவர்கள்) பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு கொழும்பு-2, மாலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியனவாகப் பதிவஞ்சில் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆய்கூட உதவியாளர் III ஆந் தர பதவி பொ. நி. 5/168" எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை, ஆனால் உபகாரச் சம்பள உரித்தற்றவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் உபகாரச் சம்பள உரித்துடைய ஒரு பதவியை ஏற்கனவே வகிப்பின் அவர் உபகாரச் சம்பள உரித்து அந்தஸ்தைத் தொடர்ந்து அனுபவிப்பர்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 2,760—4×60—17×90—4,530/-, வருடாந்தம்.

(1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு : ரூ. 834—3×42—17×72—2,184 வருடாந்தம்)

4. **தேவைப்படும் தகைமைகள்.**—அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(அ) மருதானை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது கனிட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது பல்தொழில்நுட்ப நிலையம் அல்லது கல்வி அமைச்சின் கீழுள்ள யாதேனும் நிலையம் ஒன்றில் ஆய்கூட II ஆம் வகுப்புப் பரிசரராக (முன்னைய ஆய்கூட I ஆந் தர பரிசரராக சேவை புரிபவராக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான அல்லது உயர்ந்த தகைமை பெற்றிருக்க வேண்டும். இருவிஞ்ஞான பாடங்களுடன் சித்தி எய்தியுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும், கேட்கப்படும் நேரத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) அதி உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(ஆ) உயர்தொழில்/தொழில்நுட்ப அல்லது இவ்விரு வகைத் தகைமைகளுக்கான தராதரப் பத்திரம்.

(இ) மேலுள்ள 4 ஆம் பந்தியின் (அ) ஆம் உப-பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்கூட அனுபவம் பற்றிய சான்றிதழ்.

(ஈ) சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இவ்விரு மொழிகளிலும் சித்தி எய்திய அதி உயர்ந்த பரீட்சைத் தராதரப் பத்திரம்.

குறிப்பு.—(i) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படலாகா.

(ii) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்பட மாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தின் பிரதி ஒன்று கல்வி அமைச்சின் செயலாளருக்கு நேரே அனுப்பி வைக்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் அது ஒரு பிரதியெனக் குறிப்பிடப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் அவை திணைக்களத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டு தாமதத்துக்கான போதிய காரணம் காட்டி ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி (II அ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகிறது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறத் தவறும் எவ்விண்ணப்பதாரியும் அது பற்றி கல்வி அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டுக்கமைய ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

கல்வி அமைச்சின் செயலாளர்.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மாலாய் வீதி, கொழும்பு-2
1973 யூலை 12.

*(மாதிரி விண்ணப்பப் படிவம்)*

*(8½"×13½" அளவுத் தாளில் தயாரிக்கப்பட வேண்டியது)*

**ஆய்கூட உதவியாளர், III ஆந் தர பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (தெளிவாக எழுதவும்) :————.
2. நிரந்தர முகவரி :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி யன்றுள்ளபடி வயது :————.

   பிறந்த திகதி :————.
5. விவாகம் செய்தவரா/செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————.
6. கல்வித் தகைமை :—
   (i) பொது (பாடங்களுடன்) :————.
   (ii) உயர்தொழில்/தொழில்நுட்ப அல்லது இவ்விரு வகைத் தராதரப் பத்திரங்கள் பற்றிய விபரங்கள் :————.
   (iii) சிங்கள/தமிழ் மொழியில் சித்தியடைந்துள்ள அதி யுயர்ந்த பரீட்சைத் தராதரப் பத்திரம் பற்றிய விபரங்கள் :————.
7. அறிவித்தலில் 4 ஆம் பந்தியில் (அ) ஆம் உப-பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்கூடச் சேவை பற்றிய விபரங்கள் :——.

   *(நிலையங்களின் பெயர்களும் ஒவ்வொரு நிலையத்திலும் புரிந்த சேவைக் காலமும் காட்டப்பட வேண்டும்.)*
8. தற்போதய உத்தியோகம் :—
   (i) நிலையம் (முகவரியுடன்) :————.
   (ii) ஆய்கூட I ஆந் தர பரிசாராக நியமிக்கப்பட்ட திகதி :————.
   (iii) ஆய்கூட II ஆம் வகுப்பு பரிசாராக நியமிக்கப் பட்ட திகதி :————.
   (iv) தற்போதைய பதவி நிரந்தரமானதா/தற்காலிகமானதா/உபகாரச் சம்பள உரித்துடையதா/உபகாரச் சம்பள உரித்தற்றதா ? :————.
   (v) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? அங்ஙனமாயின் உரிய கடித இலக்கம், திகதி ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.
   (vi) தற்போதைய சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் (படிகள் தவிர்ந்த) :————.
   (vii) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.
9. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

*அதிபரின் அறிக்கை*

இப்பகுதி பூரணப்படுத்தப்பட்டு, ஒரு காகித உறைக்குள் வைத்து ஒட்டப்பட்டுப் பவுத்திரமாக அஞ்சலில் இடப்படும் பொருட்டு விண்ணப்பதாரியிடம் கொடுக்கப்பட வேண்டும்.

(அ) வேலை (திருப்திகரமானது அல்லது திருப்தியற்றது எனக் கூறுவது போதாது, விபரங்கள் கொடுத்து ஆதாரமளிக்கப்பட வேண்டும்) :————.

(ஆ) நடத்தை :————.

(இ) வரவில் காலந்தவறுமை (கடந்த வருடம் பிந்தி நாட்கள் பற்றிய விபரங்கள் கொடுக்கவும்) :————.

(ஈ) விடுதலை (கடந்த 3 வருடங்கள்) :————.

| வருடம் | சமயோசித/சுகயீன/ஓய்வு விடுதலை | அரைச்சம்பள | சம்பளமற்ற |
|---|---|---|---|
| | | | |

மேலே கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை எனவும் இது உத்தியோகத்தரின் வேலை, நடத்தை ஆகியவை பற்றிய உண்மையான மதிப்பீடு எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அதிபர்.
————கல்லூரி.

திகதி :————1973.

**திணைக்கள/நிலையத் தலைவர் அத்தாட்சிப்படுத்தல்**

எனது எண் :

உங்கள் எண் : பொ. நி/5/168

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இவ்விண்ணப்பம் விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்/பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

விண்ணப்பத்தின்————பந்தியில் கொடுபட்டுள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்களுக்கமையச்* சரியானவை என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
திணைக்கள/நிலையத் தலைவரின்
கையொப்பம்.

பதவி பெயர்————.

திகதி :————.

*பொருத்தமற்ற சொற்களை நீறிவிடுக.

7-84—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

**கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் II ஆம் தர வேலைப் பரிசோதகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள்**

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் II ஆம் தர வேலைப் பரிசோதகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஆண்களிடமிருந்து 1973-08 30 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கோரப்படுகின்றன.

*குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.*

*(3) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக் கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

*(4) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கன்னரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டு விடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசை மேல் விட்டுவிட வேண்டும்.*

*(5) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

*(6) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

*(7) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், விஞவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கின்றது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

*(8) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள் கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

*(9) ஒவ்வொரு பாடத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்கு படுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்ந்து இடது பக்கத்து மேல் மூலையில் **(வலது பக்க மேல் மூலையிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

*(10) விஞப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய விஞக்கள், தெரிவுக்குரிய விஞக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

*(11) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற் போய் இப் பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

*(12) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.*

*போகொட பிரேமரட்ன,*
*பரீட்சை ஆணையாளர்.*

*பரீட்சைத் திணைக்களம்,*
*மலே வீதி, கொழும்பு 2,*

*8-242—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71*

---

**இலங்கை நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடை, இரண்டாம் மொழிப் பரீட்சைகள்—1973, ஒற்றோபர் மாதம்**

இலங்கை நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்குமான வினைத்திறமைகாண் தடை, இரண்டாம் மொழிப் பரீட்சைகள் பின்வரும் தேதிகளில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

| | | |
|---|---|---|
| **1973**, ஒற்றோபர் **22** | —சட்டம் (நிருவாகச் சேவை உத்தியோகத்தர்க்கான. முதலாம் வினைத்திறமைகாண் தடை) .. .. | 3 மணி |
| **1973**, ஒற்றோபர் **23** | —சட்டம் (ஏனைய உத்தியோகத்தர்களுக்கு) | 3 மணி |
| **1973**, ஒற்றோபர் **24** | —முகாமையும் அமைப்பும் .. (இரண்டாம் வினைத்திறமைகாண் தடை) | 3 மணி |
| | நிருவாகம்/தாபனக் கோவை* .. (முதலாம் வினைத்திறமைகாண் தடை) | 3 மணி |
| **1973**, ஒற்றோபர் **24** | —நிதி/கணக்கியல் (முதலாம் வினைத்திறமைகாண் தடை) .. .. | $2\frac{1}{2}$ மணி |
| | அபிவிருத்தி நிருவாக முறை .. (இலங்கை பற்றி சிறப்பாக அறிந்திருத்தல் வேண்டும்) (இரண்டாம் வினைத்திறமைகாண் தடை) | 3 மணி |
| **973**, ஒற்றோபர் **26** | —பொருளியல்/சமூகவியல .. (முதலாம் வினைத்திறமைகாண் தடை) | 3 மணி |
| | பொருளியல், சமூகக் கோட்பாடு .. (இலங்கை பற்றிச் சிறப்பாக அறிந்திருத்தல் வேண்டும்) (இரண்டாம் வினைத்திறமைகாண் தடை) | 3 மணி |
| **1973**, ஒற்றோபர் **27** | —சிங்களம் (எழுத்து/தமிழ் (எழுத்து)/ஆங்கிலம் (எழுத்து) .. | 2 மணி |
| | (அரசகரும மொழிக் கொள்கை நோக்கிற்காகப் " புதிதாகச் சேர்ந்தோர் " எனக் கருதப்படும் நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களுக்கான சிங்கள விஞத்தாள் 3 மணி நேரங் கொண்டவையாக இருக்கும்) | |
| **1973**, நவம்பர் **1** | —சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் (வாய்மொழிப்) பரீட்சைகள், இத் தேதியில் ஆரம்பமாகும். | |
| | (இந்த நேரசூசிகை மாற்றத்திற்குள்ளாகக் கூடியது) | |

* " அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகளும் கருமமுறைக் கைந்நூலும் " அல்லது " அரசாங்க ஆணைக்குழு விதிகளும் தாபனக் கோவையும் " என்று முன்பு தலைப்பிடப்பட்ட விஞத்தாள் " தாபனக்கோவை " என இப்பொழுது தலைப்பிடப்பட்டுள்ளதைப் பரீட்சார்த்திகள் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். இப்பாட நோக்கத்திற்காக, அவர்கள் தாபனக் கோவையின் பின்வரும் அதிகாரங்களினது அறிவை உடையவர்களாக இருக்க வேண்டப்படுகிறார்கள் :—

அதிகாரங்கள் : **II, III, IIIஏ, V, VI, VII, IX, XVI, XXI, XXIV, XXIX, XXX, XXXII, XXXIII, XXXV, XXXVI, XXXVIII, XXXIX, XL, XLI, XLIII. XLIV. †**

†தாபனக் கோவையின் அதிகாரம் IIIஏ இன்னும் அச்சிடப்படாததினால், அந்த அதிகாரத்தினது படியெடுக்கப்பட்ட பிரதிகளை, கொழும்பு 7, சுதந்திரச் சதுக்கம், அரசாங்க நிருவாகத் திணைக்களம், தாபனப் பணிப்பாளர் என்னும் முகவரிக்கு விண்ணப்பித்தலின் மூலம் பரீட்சார்த்திகள் பெறலாம்.)

2. இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைகள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாக விருக்கும் :—

(அ) **முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை—(புதிய பாடத் திட்டம்)**

(i) சட்டம்

(ii) நிதி

(iii) நிருவாகம்

(iv) பொருளியல்* அல்லது சமூகவியல்*.

*(உத்தியோகத்தர்கள் பொருளியல், சமூகவியல் என்ற இரண்டில் **ஒன்றுக்குத்** தோற்றலாம்)

பொருளியலில் அல்லது சமூகவியலில் சிறப்பு மாணிப் பட்டத் தைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள், விதிக்கப்பட்ட பொரு ளியல் அல்லது சமூகவியல் சித்தியெய்துவதினின்றும் விலக்க ளிக்கப்பெறுவர். பொருளியலை அல்லது சமூகவியலை ஒரு பாட மாகக் கொண்டு பெற்ற பொது மாணிப்பட்டமானது, விதிக்கப் பட்ட பொருளியல் அல்லது சமூகவியல் பரீட்சையில் சித்தியெய்து வதிலிருந்து விலக்குப் பெறுவதற்கு விலக்களிக்குமாறு கோரு வதற்கு ஓர் உத்தியோகத்தருக்கு **உரித்தளிக்காது.**

குறிப்பு— (i) இப் பரீட்சை பற்றிய பாடத்திட்டங்களும் ஏனைய ஏற்பாடு களும் **இலங்கைக் குடியரசின் 1973, ஏப்பிரல் மாதம் 02 ஆந் தேதிய இல. 53/3 ஐக் கொண்ட அதிவிசேடச் செய் மடலில்** வெளியிடப்பட்ட, 1973, மார்ச்சு மாதம் 26 ஆந் தேதியிடப்பட்ட இலங்கை நிருவாகச் சேவை பற்றிய பிரமாணக்குறிப்பின் பின்னிணைப்பு " **ஆ** " இல் குறிப் பிடப்பட்டுள. அவை, 1973, ஏப்பிரல் மாதம் 15 ஆந் தேதிய 126 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றறி விப்பு நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள " நிதி " என்னும் பாடத்திற்காய பாடத்திட்டத்தின் விவரணத்திற்கமையவி ருக்கும். " நிருவாகம் " என்ற வினாத்தாளின் நோக்கத் திற்கான தாபனக் கோவையின் பொருத்தமான அதிகாரங் கள் மேலேயுள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ii) 1971.09.30 இல் சேவையிலிருந்த நிருவாக சேவை உத்தி யோகத்தர்கள், மேலே (**அ**) வில் உள்ள முதலாம் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை **அல்லது** கீழே (**ஆ**) வில் உள்ள முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை ஆகிய இரண்டில் ஏதாவது **ஒன்றை** எடுக்கும் விருப்புரிமை யைக் **கடைசித் தடவையாக 1973, ஒற்றோபர் மாதத்தில் பெறுவர்.** 1973, ஒற்றோபர் மாதத்தின் பின், இலங்கை நிருவாகச் சேவை பற்றிய பிரமாணக்குறிப்பின் " **அ** " பின்னிணைப்பிலுள்ள பாடத்திட்டத்தின் பிரகாரம் முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அவர்கள் வேண்டப்படுவர்.

(ஆ) **முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை—(பழைய பாடத் திட்டம்)**

(i) சட்டம்

(ii) கணக்கியல்

(iii) தாபனக்கோவை

குறிப்பு.— (i) 1971.09.30 இல் சேவையிலிருந்த நிருவாக சேவை உத்தியோகத்தர் மட்டுமே மேலே (அ) இல் உள்ள முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்குப் பதிலாக இப் பரீட்சைக்குத் தோற்ற விருப்பந் தெரிவிக்கலாம்.

1973, ஒற்றோபர் மாதத்தின் பின்நடாத்தப்படவுள்ள பரீட்சைகள் சம்பந்தமாக, உத்தியோகத்தர்களுக்கு விருப் புரிமை கிடைக்கத்தக்கதாகவிராது.

(ii) இப் பரீட்சை பற்றிய பாடத்திட்டங்களும் ஏனைய ஏற்பாடு களும், பின்வரும் மாற்றங்களுக்கு அமைவாக, 1965, யூலை மாதம் 12 ஆந் தேதிய 13,697 ஆம் இலக்க **இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில்** வெளி யிடப்பட்ட, 1963 யூலை மாதம் 10 ஆந் தேதிய திறைசேரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட, அப்போதைய வகுப்பு V தரம் I இல் இருந்து உத்தியோகத்தர்களுக்கு அப் போதைய வகுப்பு IV இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தி யோகத்தர்களுக்குமாய முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை தொடர்பானவை போன்று இருக்கும்.

(அ) " சட்டம் " என்னும் பாடத்திற்காய பாடத்திட்டத்தின் பிரிவு III இலங்கை அரசமைப்பு என்பதன் பகுதி யாக, (அத்தியாயம் 376) 1947 ஆம் ஆண்டின் இலங்கைச் சுதந்திரச் சட்டத்தை நீக்கிவிட்டு, இலங் கைக் குடியரசின் அரசமைப்பைச் சேர்த்துக்கொள் ளல் ;

(ஆ) " அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகளும் கரும முறைக் கைந்நூலும் " என்பதற்குப் பதிலாக " தாப னக் கோவை " என்பதை இடல் ;

(இ) 1973, மே மாதம் 15 ஆந் தேதிய 126 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிவிப்பு நிருபத்தில் குறிப் பிட்டுள்ளவாறான " நிதி " என்னும் பாடத்தின் விடயத்தைப் போன்று " கணக்கு " என்னும் பாடத் தின் பாடத்திட்டத்தையும் விவரணித்தல்.

தாபனக் கோவையின் பொருத்தமான அதிகாரங்களா வன அறிவிப்பின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன வையே.

(இ) **நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி உட்பட்ட இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை.**

(i) பொருளியல், சமூகக் கோட்பாடு (இலங்கை பற்றிச் சிறப்பாக பாக அறிந்திருத்தல் வேண்டும்)

(ii) அபிவிருத்தி நிருவாக முறை (இலங்கை பற்றிச் சிறப்பாக அறிந்திருத்தல் வேண்டும்)

(iii) முகாமையும் அமைப்பும்.

(iv) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்.

அரசகரும மொழிக் கொள்கை நோக்கிற்காகப் " புதிதாகச் சேர்ந் தோர் " எனக் கருதப்படுபவர்களும், சிங்கள மொழி மூலம் சேவையிற் சேர்வதற்கு தகைமை பெற்றவர்களுமான உத்தியோகத்தர்கள் மட்டுமே தமிழ்ப் பாடத்திற்குப் பதிலாக ஆங்கிலப் பாடத்திற்குத் தோற்றலாம்.

குறிப்பு— (i) (I) ஆம், (II) ஆம் பாடங்கள் பற்றிய பாடத்திட்டங்களும் ஏனைய ஏற்பாடுகளும், **இலங்கைக் குடியரசின் 1973, ஏப்பிரல் மாதம் 02 ஆந் தேதிய இல. 53/3 ஐக் கொண்ட அதிவிசேடச் செய்திமடலில்** வெளியிடப்பட்ட, 1973, மார்ச்சு மாதம் 23 ஆந் தேதியிட்ட இலங்கை நிருவாக சேவை பற்றிய பிரமாணக்குறிப்பின் பின்னிணைப்பு (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ளன. சிங்களம், தமிழ் ஆகிய பாடங்கள் சம்பந்தமான பரீட்சை பற்றிய பாடத்திட்டங்களும் ஏனைய ஏற்பாடுகளும் 1967, **திசெம்பர் மாதம் 22 ஆந்** தேதிய 14,780 ஆம் இலக்க இலங்கை அரசாங்கச் செய்தி மடலில் வெளியிடப்பட்ட 1967, திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய திறைசேரி அறிவிப்பினால் திருத்தப்பட்டவாறான, 1963, யூலை மாதம் 12 ஆந் தேதிய 13,697 ஆம் இலக்க **இலங்கை அரசாங்க அதிவிசேடச் செய்திமடலில்** வெளி யிடப்பட்ட 1963, யூலை மாதம் 10 ஆந் தேதிய திறைசேரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அப்போதைய வகுப்பு V தரம் I இல் இருந்த உத்தியோகத்தர்களுக்கும் அப் போதைய வகுப்பு IV இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்குமாய முதலாம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை தொடர்பானவைபோன்று இருக்கும்.

(ii) 1956.09.24 இல் அல்லது அதன் பின்னர் அப்போதைய இலங்கை குடிசார் சேவைக்கும் நிருவாக சேவைக்கும் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சிங்களப் பரீட்சை சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தர முடையதாகவும் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகவு மிருக்கும், அவையாவன :—

(அ) மொழியும் கட்டுரையும் .. 3 மணி

(ஆ) மொழிபெயர்ப்பு .. 3 மணி

1963, யூலை 12 இன் 13,697 ஆம் இலக்க இலங்கை **அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானியில்** வெளியிடப்பட்ட 1963 யூலை 10 ஆந் தேதிய திறைசேரி அறிவித்தலில் ஏனைய நிருவாகச் சேவை உத்தியோகத்தர்களுக்கான சிங்களப் பரீட்சையின் பாடத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதிய தரமுடையதெனக் கருதப்படும் சிங்களப் பரீட்சையொன்றில் ஏற்கெனவே சித்தியடைந்துள்ள உத்தி யோகத்தர்கள், சிங்களப் பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

(iii) ஆங்கிலப் பரீட்சை கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தரமுடையதாகும். அதன் பாடத்திட்டம் 1972, யூன் 10 இன் 85 ஆம் இலக்க இணைந்த சேவைகளின் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பாடத்தில் சித்தியொன்றிற்காக எழுத்து, வாய் மொழிமூலம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் ஒவ்வொரு பிரிவிலும் 35 சத வீதத்தைப் பெறுமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர்.

போதிய தரமுடைய ஆங்கிலப் பரீட்சையொன்றில் ஏற் கெனவே சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள், ஆங் கிலப் பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டிய தேவை யிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

3. கடல்கடந்த சேவைத் தகுதிகாண் நிலையினர், பொலிசுப்படை, நாட்டுவரித் திணைக்கள, சிறைச்சாலைத் திணைக்கள, காட்டுத் திணைக்கள, மிருகக் காட்சிச்சாலைத் திணைக்கள, இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்கள, குடிசார் வான்செலவுத் திணைக்கள, மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான பரீட்சையும், முன்னைய அரசாங்க கட்டு வேலைத் திணைக்கள, அளவைத் திணைக்கள, அஞ்சல், தொலைச்செய்திப் போக்குவரத்துத் திணைக்கள, கமத்தொழில் திணைக்கள, நீர்ப்பாசனத் திணைக்கள, புகைவண்டித் திணைக்கள, துறைமுக எந்திரவியலாளர் திணைக்கள, கொழும்புத் துறை ஆணைக்குழு, முன்னைய அரசாங்க மின்வேலைகள் பொறுப்பேற்புத் திணைக்கள, சமூக சேவைகள் திணைக்கள, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள, வர்த்தகத் திணைக்கள, முன்னைய கைத்தொழில் திணைக்கள, தொழிற்றிணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் வெடிமருந்து பரிசோதனையாளர்களுக்குமான மொழியில் வாய்மொழிப் பரீட்சையும் ஒரே நேரத்திலும், இடத்திலும் நடாத்தப்படும்.

4. கீழே திரும்பவும் தரப்படும், 1966.09.04 ஆந் தேதிய, 701 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்திக்கு இப்பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினதும் கவனம் வேண்டப்படுகிறது :—

**திணைக்களப் பரீட்சைகள் (உயர்ச்சி, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் உட்பட்டது)**

அரசாங்க சேவையிற் சேர்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு உத்தியோகத்தர் தோற்றிய மொழி அல்லது அரசகரும மொழியே உயர்ச்சிக்கான பரீட்சைகளுக்கும், வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்குமான மொழியாகும். தொடக்க ஆட்சேர்ப்பு, போட்டிப் பரீட்சையொன்றின்றி நடைபெற்றிருக்கும் விடயங்களில், உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் சேர்வதற்குத் தகைமைபெற்ற மொழி அல்லது அரசகரும மொழியே உயர்ச்சி, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்கான மொழியாகும்.

5. (i) சட்டம் ;
(ii) நிதி/கணக்கியல் ;
(iii) நிருவாகம்/தாபனக் கோவை ;
(iv) பொருளியல் ;
(v) சமூகவியல் ;
(vi) பொருளியல், சமூகக் கோட்பாடு ;
(vii) அபிவிருத்தி நிருவாகமுறை ;
(viii) முகாமையும் அமைப்பும்.

ஆகிய வினாத்தாள்களுக்கு சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் பரீட்சார்த்திகள் விடையெழுதுவதற்கான ஒழுங்குகள் பரீட்சை ஆணையாளரால் செய்யப்படும்.

6. தான் தோற்றுவதற்குரித்தில்லாத ஒரு மொழியில் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றியது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது பரீட்சார்த்தித் தன்மை நீக்கப்படும்.

7. இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க, ஒரு முழுத் தாளின் அரைத் தாளில் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். தாளின் இரு பக்கங்களும் உபயோகிக்கப்பட வேண்டும்.

8. இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் ; பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை நடத்துவதற்கான விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவர். இவ்வறிவித்தலினிறுதியில் இவ் விதிகளும் பிரமாணங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

9. 1973, செத்தெம்பர் மாதம் 10 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளரை அடையத்தக்கதாகப் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்கள் மூலமாகப் **பதிவுத் தபாலில்** அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் பெறப்படும் எதும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

10. பரீட்சைத் தினத்துக்குக் குறைந்த பட்சம் எழு நாட்களுக்கு முன்னுகவாவது பரீட்சார்த்தியொருவர் தனது அனுமதிப் பத்திரத்தைப் பெருதிருந்தால், கொழும்பு 2 தபால் பெட்டி 1503, மலாய் வீதி (தந்தி விலாசம் : " எக்சாம்ஸ் " கொழும்பு) என்ற விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளரோடு தாமதமின்றித் தொடர்பு கொண்டு தனக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையென்பதைப் பின்வரும் தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும்.

(1) பரீட்சையின் பெயர் ;

(2) முழுப் பெயர் ;

(3) முழுத் தபால் விலாசம் ;

(4) தபாற் கந்தோரும், பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய தேதியும்.

அண்மையிலுள்ளவர்கள் பரீட்சை ஆணையாளருடன் (" ஈ " கிளை) தூதுவர் மூலம் தொடர்பு கொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகிருர்கள்.

11. மேலே 10 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டவாருன தேவைகளுக் கிணங்கியொழுகத் தவறும் பரீட்சார்த்திகளால் செய்யப்படும் பிற்பட்ட கடிதத் தொடர்புகள் கவனத்திற் கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

12. அடையாள அட்டைகளின் உபயோகம் பற்றிப் பரீட்சை ஆணையாளரால் விடுக்கப்பட்ட 1971.06.29 ஆந் தேதிய இலக்கம் எஸ். ஈ. 274 ஐக் கொண்ட சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் யாவரினதும் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும்.

13. பின்வரும் அடிப்படையில், இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்பட முடிவுசெய்யப்பட்டுள்ளது.

(அ) முதல் அமர்வு (முழுப் பரீட்சை அல்லது ஒரு பகுதி) கட்டணமெதுவுமில்லை ;

(ஆ) பிற்பட்ட ஒவ்வொரு அமர்விற்கும்—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| முழுப் பரீட்சை | .. | 30 | 0 |
| ஒரு பாடம் | .. | 10 | 0 |
| வாய்மொழித் தேர்வு | .. | 5 | 0 |

கட்டணங்கள், பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளில் செலுத்தப்பட வேண்டும்.

இப்பரீட்சைக்கு ஏற்கெனவே தோன்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகிருர்கள்.

பீ. எச். சிறிவர்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணுட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரும் பதில் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியும்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணுட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
1973, யூலை மாதம் 18 ஆந் தேதி.

விண்ணப்பப் படிவம்

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

**இலங்கை நிருவாக சேவை, கடல்கடந்த சேவை, வைத்திய சேவை தவிர்ந்த ஏனைய அரச சேவைகள் ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை— 1973, ஒற்ருேபர் மாதம்**

கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளருக்கு திணைக்களத் தலைவர் மூலமாக பதிவு அஞ்சலில் அனுப்பப்படவேண்டியது.

கடித உறையின் இடதுபுற மேற்பக்க மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.

1. (அ) முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் : ————.
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ————.

2. பிறந்த திகதி : ————.

3. பதவிப் பெயர் : ————.
திணைக்களத்தின் பெயர் : ————.

4. அஞ்சல் முகவரி (அனுமதிப் பத்திரம் அனுப்பப்படுதற்காக) : ——.

5. நிருவாக சேவையிலுள்ள உத்தியோகத்தர் அத்தகைய சேவைக்கு அவர் நியமிக்கப்பட்ட திகதி : ————.

6. நிருவாக சேவையிலில்லாத உத்தியோகத்தரெனின், அவர் சார்ந்துள்ள சேவை : ————.

7. நிருவாக சேவையிலுள்ள உத்தியோகத்தரெனின், அவர் விண்ணப்பிக்கும் பரீட்சை : ————
(பொருந்தாதவற்றை நீக்கிவிடுக)

(அ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை (அ) ;

(ஆ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆ)— 1971.09.30 இல் சேவையிலிருந்த நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கானது ;

(இ) இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை ;

(ஈ) இரண்டாம் மொழிப் பரீட்சை.

8. நிருவாக சேவையிலில்லாத உத்தியோகத்தரெனின், அவர் விண்ணப்பிக்கும் பரீட்சை : ————.
(பொருந்தாதவற்றை நீக்கிவிடுக)

**கடல்கடந்த சேவை :**

(அ) முதற் பரீட்சை ;
(ஆ) இரண்டாம் பரீட்சை.

**திணைக்களப் பரீட்சை :**

திணைக்களம் :—

9. தோற்றும் பாடங்கள் (தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்)

(i)
(ii)
(iii)
(iv)
(v)
(vi)
(vii)
(viii)

10. உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி : ————.

11. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோன்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக ; அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும், ஆண்டையும் மாதத்தையும் தருக.

12. மேலே கூறப்பட்ட விபரங்கள் சரியானவையென்றும், மேலே 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவரென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

*இவ்விண்ணப்பத்தில் ஒட்டப்பட்ட முத்திரைகள் பெறுமானமுள்ளவையெனவும், என்னல் மதிப்பு நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் பாவிக்கப்படாதவையென்றும் மேலும் உறுதிப்படுத்துகிறேன்.

முத்திரைக் கூடு

————.
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ————.

பரீட்சை ஆணையாளர்,
அனுப்பப்படுகிறது.

இதனகத்து விபரங்கள் காணப்படும் பரீட்சார்த்தி இப் பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவரென்றும் 10 ஆம் பந்தியில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப் பரீட்சைக்கு தோற்ற அவர் தகவுடையவரென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

*முத்திரை/கள் முறையாக ஒட்டப்பட்டுப் பரீட்சார்த்தியால் மதிப்பு நீக்கம் செய்யப்பட்டது/பட்டன என மேலும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.
பரீட்சார்த்தியின் கையொப்பத்தை நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.

திகதி : ————.

*(கட்டணம் செலுத்தப்படவேண்டியிராதவிடத்து நீக்கப்படலாம்)

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளின் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) மூலப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்துவைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்ரும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எளினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்ரசகளைச சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் பொது நிருவாக, உள்ளூராட்சி, உண்ணுட்டலுவல்கள் அமைச்சினுற் பரிசீலனை செய்வதற்நுட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பினனரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப் படமாட்டாது.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்ார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவார்.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. விஞத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றைத்தாளிலோ விஞத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்கு கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு விஞவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விறையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ் விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான விஞக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிலிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் கீத்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றிஞேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ

மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை, அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் எவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாக பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பார். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்க கூடாது. ஒரு பரீட்சார்த்தி வெறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல் பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமாகக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு—**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் : —

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்சொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சாத்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(v) சாதாரணமாகப் பரீட்சைக்குவேண்டிய விடைத்தாள்,ஒற்றுத்தாள் கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். உமக்கெனத் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப் படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப் பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெயயும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்தவேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடுகள் விடப்படவேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டுருபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது, கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுத்திய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கதது மேல் மூலையில் (வலதுபக்கமேல் மூலையிலன்று)உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து எற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணுமற்போய் இப் பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகர்களிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களை கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

போகொட பிரேமரத்தின,
பதில் பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,

8–243—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 7।

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளப்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8 மணி முதல் நண்பகல் **12** மணி **வரையும்,** மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11 மணிக்கும், மற்றும்நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத் தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறேக்ரறுல்" கையொப்ப மிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன்பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு,** அவர்கட்கு சகல அறிவித் தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கு ந்தாச ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

### தட்னிப்பட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. டி. பிரீஸ,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.